| | |
|---|---|
| | **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை - 08.** |
| | **இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு - 2023.** |
| | **அறிவிக்கை எண் - 02 / 2023.** |

தேதி: **08.08.2023**

## 1. தேர்வு விவரம்:

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரண்டாம் நிலைக் காவலர் (ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2023-க்கு (இந்திய குடியுரிமை உடையவர்கள் மட்டும்) விண்ணப்பதாரர்களிடமிருந்து, இணைய வழி விண்ணப்பங்களை (Online Application) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூ.18,200 - 67,100.

**இத்தேர்வுக்கான முக்கிய தேதிகள்**

| | | |
|---|---|---|
| i. | அறிவிக்கை தேதி | 08.08.2023 |
| ii. | இணைய வழி விண்ணப்பம் சமர்பிப்பதற்கான ஆரம்ப தேதி | 18.08.2023 |
| iii. | இணைய வழி விண்ணப்பம் சமர்பிப்பதற்கான கடைசி தேதி | 17.09.2023 |
| iv. | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | பின்னர் அறிவிக்கப்படும் |

## 2. மொத்த காலிப்பணியிடங்கள் : 3,359

| துறை | பதவி | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலைக் காவலர் (மாவட்ட / மாநகர ஆயுதப்படை) | -- | 780 | 780 |
| | இரண்டாம் நிலைக் காவலர் (தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) | 1,819 | -- | 1,819 |
| சிறை மற்றும் சீர்திருத்தத் துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 83 | 3 | 86 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 674 | -- | 674 |
| | **மொத்தம்** | **2,576** | **783** | **3,359** |

## 3. சிறப்பு ஒதுக்கீடுகள் :

| ஒதுக்கீட்டு விவரம் | மொத்த காலிப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|
| சார்ந்துள்ள வாரிசுதாரர்கள் (Wards cum Dependent) | 10% | 336 | 9% அந்தந்த துறையிலுள்ள களப்பணியாளர்களின் சார்ந்துள்ள வாரிசுகள் மற்றும் 1% அந்தந்த துறையிலுள்ள அமைச்சுப் பணியாளர்களின் சார்ந்துள்ள வாரிசுகள். |
| விளையாட்டு (Sports) | 10% | 336 | அங்கீகரிக்கப்பட்ட 16 விளையாட்டுப் போட்டிகளில் தேசிய / தமிழ்நாடு சார்பாக மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்பாக பங்கு பெற்றவர்கள். |

குறிப்பு :

i. விண்ணப்பதாரர்கள் விளையாட்டு ஒதுக்கீடு அல்லது சார்ந்துள்ள வாரிசுதாரருக்கான ஒதுக்கீடு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஒதுக்கீட்டிற்கான பயனை மட்டுமே பெற இயலும்.

ii. விளையாட்டு ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீட்டிலுள்ளவர்களைக் கொண்டு நிரப்பப்படும். இருப்பினும், வாரிசு ஒதுக்கீடு மற்றும் விளையாட்டு ஒதுக்கீட்டின் மொத்த சதவீதம் 20% மிகாமல் பின்பற்றப்படும்.

iii. வாரிசு ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

iv. ஒவ்வொரு ஒதுக்கீட்டினுள்ளும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி வழங்கப்படும்.

## 4. இதர ஒதுக்கீடுகள்

| ஒதுக்கீட்டு விவரம் | மொத்த காலிப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | தகுதிகள் |
|---|---|---|
| முன்னாள் இராணுவத்தினர் | மீதமுள்ள 80% காலிப் பணியிடங்களில் **5%** | இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தேதியில் இருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாதவர்கள் மற்றும் விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ளவர்கள். |
| ஆதரவற்ற விதவைகள் | மீதமுள்ள 80% காலிப் பணியிடங்களில் **3%** | வருவாய் கோட்ட அலுவலர் (RDO) / சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து சான்றிதழ் பெற்ற ஆதரவற்ற விதவைகள். |

**குறிப்பு:**

இதர ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்த காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

## 5. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM)

முதலாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்றிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தேர்வின் ஒவ்வொரு நிலையிலும் மொத்த காலிப் பணியிடங்களில் 20% முன்னுரிமை அளிக்கப்படும்.

## 6. விண்ணப்பதாரர்களுக்கான வயது தகுதிகள் :

பொது விண்ணப்பதாரர்கள் 01.07.2023 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் மற்றும் 26 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். சில பிரிவினருக்கு வயது உச்சவரம்பு தளர்வு கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| | பிரிவுகள் | வயது உச்சவரம்பு |
|---|---|---|
| i. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் BC(M) ) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC / DNC) | 28 வயது |
| ii. | ஆதிதிராவிடர் (SC) / ஆதிதிராவிடர் (அருந்ததியர் SC(A) ) / பழங்குடியினர் (ST) | 31 வயது |
| iii. | மூன்றாம் பாலினத்தவர் | 31 வயது |
| iv. | ஆதரவற்ற விதவைகள் | 37 வயது |
| v. | முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள இராணுவத்தினர் / முன்னாள் மத்திய ஆயுத காவல்படையினர். | 47 வயது |



https://www.freshersnow.com/

**7. சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கான வயது வரம்பு :**

பொது விண்ணப்பதாரர்கள் 01.07.2023 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் மற்றும் 32 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். சில பிரிவினருக்கு வயது உச்சவரம்பு தளர்வு கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| | **பிரிவுகள்** | **வயது உச்சவரம்பு** |
|---|---|---|
| i. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் BC(M)) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC / DNC) | 34 வயது |
| ii. | ஆதிதிராவிடர் (SC) / ஆதிதிராவிடர் (அருந்ததியர் SC(A)) / பழங்குடியினர் (ST) | 37 வயது |
| iii. | மூன்றாம் பாலினத்தவர் | 37 வயது |

**8. கல்வித் தகுதி :**

**குறைந்தபட்சம்** 10-**ம் வகுப்பு** / SSLC **அல்லது அதற்கு சமமான கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்**.

**9. இடஒதுக்கீடு :**

**வகுப்பு வாரி இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும். தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ் பெற்றவர்கள் மட்டுமே வகுப்புவாரி இடஒதுக்கீட்டில் பரிசிலீக்கப்படுவார்கள். வகுப்பு வாரியான இடஒதுக்கீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-**

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் (OC) | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) (BC(M)) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் (MBC / DNC) | 20% |
| ஆதிதிராவிடர் (SC) | 15% |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) (SC(A)) | 3% |
| பழங்குடியினர் (ST) | 1% |

**10. பதவி விருப்ப முன்னுரிமை :**

முழுமையான விவரங்கள் தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

**11. தேர்வு நிலைகள் :**

| **வ.எண்** | **தேர்வு நிலைகள்** | **விவரம்** |
|---|---|---|
| i. | எழுத்துத் தேர்வு | **பிரிவு - I** தமிழ் மொழித் தகுதித் தேர்வு : 80 மதிப்பெண்கள் (கொள்குறி வகை)<br>**பிரிவு - II** முதன்மை எழுத்துத் தேர்வு : 70 மதிப்பெண்கள் (கொள்குறி வகை) |
| ii. | சான்றிதழ்கள் சரிபார்த்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வுகள் | சான்றிதழ்கள் சரிபார்த்தலில் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே அடுத்த கட்ட தேர்வு நிலைக்கு அனுமதிக்கப்படுவார்கள். |
| | | உடற்கூறு அளத்தல் மற்றும் உடல்உறுதி தேர்வு ஆகியன தகுதித் தேர்வுகள் மட்டுமே. அதற்கு மதிப்பெண்கள் கிடையாது. |
| | | உடற்திறன் போட்டிகளுக்கான அதிகபட்ச மதிப்பெண்கள் - 24.<br>விண்ணப்பதாரர்கள் அனைத்து உடல்திறன் போட்டிகளிலும் பங்குபெற வேண்டும். |
| iii. | சிறப்பு மதிப்பெண்கள் | தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் விளையாட்டு போட்டிகள் ஆகியனவற்றிற்கு தலா 2 மதிப்பெண்கள் வழங்கப்படும்.<br>அதிகபட்சம் 6 மதிப்பெண்கள். |
| | **மொத்தம்** | 100 மதிப்பெண்கள் |

தமிழ் மொழித் தகுதித் தேர்வில் (**பிரிவு**-I) குறைந்தபட்சம் 32 மதிப்பெண்கள் (40%) பெற்றால் மட்டுமே, விண்ணப்பதாரர்களுடைய, முதன்மை எழுத்துத் தேர்வின் (**பிரிவு**-II) விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்.

முதன்மை எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாக குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் (35%) பெற வேண்டும். விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச மதிப்பெண்கள், மற்றும் வகுப்புவாரி சுழற்சி அடிப்படையில் அடுத்த கட்டத் தேர்வான அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல்உறுதி தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கு மொத்தக் காலிப்பணியிட எண்ணிக்கையில் **1 : 5** என்ற விகிதாச்சாரப்படி அழைக்கப்படுவார்கள்.

**12. எழுத்துத் தேர்வு மையம் :**

எழுத்துத் தேர்வு மைய விவரம் தேர்வுக்கூட சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். எழுத்துத் தேர்வுக்கான மையங்களின் எண்ணிக்கையை கூட்டவும், குறைக்கவும் அல்லது விண்ணப்பதாரரை ஒரு மையத்திலிருந்து வேறொரு மையத்திற்கு நிர்வாக காரணத்திற்காக மாற்றவும் இவ்வாரியத்திற்கு உரிமை உண்டு. விண்ணப்பதாரர் தேர்வுகூட சீட்டில் குறிப்பிட்டுள்ள தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

**13. தேர்வுக் கட்டணம் :**

விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ.250/- இணையதள வழி (இணையதள வங்கி / வங்கி கடன் அட்டை / வங்கி பற்று அட்டை / UPI ) மற்றும் இணையமில்லா வழியில் SBI வங்கியின் செலுத்துச் சீட்டு மூலம் SBI வங்கியின் அனைத்து கிளைகளிலும் அலுவல் நேரத்தில் செலுத்தலாம்.

**14. இணையவழி விண்ணப்பம் :**

விண்ணப்பதாரர்கள் இவ்வாரியத்தின் இணையதளமான www.tnusrb.tn.gov.in மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இதர வழிகளில் விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**15. இறுதி தற்காலிகத் தேர்வு :**

விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வு, உடல்திறன் தேர்வு மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெற்ற மொத்த உயர்ந்தபட்ச மதிப்பெண்களின் அடிப்படையிலும், விண்ணப்பதாரர்கள் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப வகுப்பு வாரி விகிதாச்சார அடிப்படையிலும், வகுப்பு வாரி சுழற்சி முறையிலும் மாவட்ட / மாநகர ஆயுதப்படை அல்லது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அல்லது இரண்டாம் நிலை சிறைக் காவலர் அல்லது தீயணைப்பாளர் பதவிக்கு இறுதி தற்காலிக பட்டியலுக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

**16. மருத்துவப் பரிசோதனை, முந்தைய குற்ற நடவடிக்கைகள் & குணநலன்கள் குறித்த விசாரணை:**

இரண்டாம் நிலைக் காவலர் (மாவட்ட / மாநகர ஆயுதப்படை மற்றும் தமிழ் நாடு சிறப்புக் காவல் படை), இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுபவர்கள், மருத்துவப் பரிசோதனைக்கும், முந்தைய குற்ற நடவடிக்கைகள் மற்றும் குணநலன்கள் குறித்தும் அந்தந்த துறையால் விசாரித்து சரிபார்க்கப்படுவார்கள்.

**17. தகவல் சிற்றேடு :**

இத்தேர்விற்கான கூடுதல் தகவல்கள், எழுத்துத் தேர்விற்கான தேர்வு நிலைகள் மற்றும் தேர்வு முறைகள், ஆகியவை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய இணையதளமான www.tnusrb.tn.gov.in-ல் இருந்து தகவல் சிற்றேட்டைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**18.** விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர், இவ்வாரிய இணையதளத்திலுள்ள தகவல் சிற்றேட்டினை படித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,
சென்னை - 08.